## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அறந்தாங்கி

**அசல் வழக்கு எண்.** 75/2019

**வாக்குமூலம்.பி.வா.சா.1**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ஆறுமுகம் | தொழில் | |
| த/பெ. | கருப்பையா | வயது | 75 / 2025 |
| கிராமம் | | | |
| தாலுகா | | | |

1873–ம் வருடத்து 10–ம் சட்டத்தின் கீழ் சாட்சி பிரமாணம் செய்விக்கப்பட்டு 19.09.2025ம் தேதியில் விசாரணை செய்யப்பட்டது.

**முதல் விசாரணை தொடர்ச்சி**

வழக்கு சொத்தில் உள்ள மின்இணைப்பிற்கான 14.12.1995 தேதிய மின்கட்டண ரசீது மற்றும் மே மாதம் 2005 ஆண்டிற்கு உரிய மின்கட்டண ரசீது அசல் தாக்கல் செய்கிறேன். மேற்படி ரசீதுகள் வாதி தரப்பில் தாவா சொத்தின் மின் இணைப்பில் இல்லை என்று ஆட்சேபிக்கப்பட்டு ஆட்சேபணையுடன் பி.வா.சா.ஆ.1 வரிசை எண்ணிக்கை 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. வழக்கின் வாதி எனக்கு கடந்த 12.12.2013ஆம் தேதி அவரது வழக்கறிஞர் மூலம் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு சார்பு செய்யப்பட்ட அசல் தாக்கல் செய்கிறேன் அது பி.வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி வழக்கறிஞர் அறிவிப்பிற்கு எனது வழக்கறிஞர் மூலம் நான் கடந்த 10.01.2014ஆம் தேதி அனுப்பிய பதில் அறிவிப்பு அலுவலக நகல் தாக்கல் செய்கிறேன் அது பி.வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னுடைய ஆதார் அட்டை நகல் தாக்கல் செய்கிறேன் அது அசலுடன் ஒப்பிடப்பட்டு அது பி.வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. தாவா சொத்தில் நான் வசிப்பதை காட்ட என்னுடைய குடும்ப அட்டை நகல் தாக்கல் செய்கிறேன் அது அசலுடன் ஒப்பிடப்பட்டு பி.வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**